ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2318/11 - 2023 පෙබරවාරි මස 06 වැනි සඳුදා - 2023.02.06
*2318/11 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 06 ஆந் திகதி திங்கட்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 1/2012* (V)

### *1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பண்டுத்தல் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்*

*1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதகாரசபைச் சட்டத்தின் 37 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ் கடற்றொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*கடற்றொழில் அமைச்சர்.*

கொழும்பு,
*2023, பெப்புருவரி 01.*

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2023 ஆம் ஆண்டின் கடலுயிரி வளர்ப்பு முகாமைத்துவ ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இலங்கை நீர்ப்பரப்பு களிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட இடப்பரப்புகளிலான கடலுயிரி வளர்ப்பு இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கிணங்க நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

3. வெளிப்படுத்தப்படும் ஏதேனும் பாதுகாக்கப்பட்ட இயற்கை அல்லது வரலாற்றுமுறை அமைவிடங்களில் அல்லது அவற்றைச் சுற்றி அல்லது பாதுகாக்கப்பட்ட இடப்பரப்புகளாக அல்லது கடற்றொழில் மற்றும் சுற்றுலாப்பயணத்துறை நீர்வழிச்செலவு இடப்பரப்புகளாக ஏதேனும் சட்டத்தினால் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் இடப்பரப்பில் கடலுயிரி வளர்ப்புப் பண்ணையெதுவும் தாபிக்கப்படுதலாகாது.

4. அதிகாரசபையினால் வழங்கப்பட்ட ஓர் எழுத்திலான அனுமதியின்றி, கடலுக்குள் அல்லது கடலைச் சுற்றியுள்ள சூழலினுள் பண்படுத்தப்பட்ட உயிருள்ள உயிரியின் பாகமெதுவும் வெளியேற்றப்படுதலாகாது.

5. பண்ணைத்தொழிலுக்காகப் பயன்படுத்தப்படும் பண்படுத்தற்பொருட்களும் முறைகளும், அந்நோக்கத்துக்காக அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுக்கிணங்கவிருத்தல் வேண்டும்.

6. ஏதேனும் கடல்சார் துடுப்புமீன் கூடு மற்றும் பண்ணைக் கூடு பண்படுத்தற் கூறானது, கொண்டுசெல்லும் கொள்ளளவு, இனங்கள் மற்றும் தொழிற்பாட்டின் அளவு என்பவற்றுக்கிணங்க அதிகாரசபையினால் தீர்மானிக்கப்பட்டவாறு ஒவ்வொரு பண்படுத்தற் கூறிலிருந்தும் குறைந்தபட்சம் ஒரு (01) கிலோமீற்றர் தூரத்தினுள் தொழிற்படுத்தப்படுதல் வேண்டும்.

7. ஒவ்வொரு கடலுயிரி வளர்ப்புப் பண்ணையும் மத்திய சூழல் அதிகாரசபையினால் அல்லது கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையினால் ஆக்கப்பட்ட கழிவுப்பொருள் முகாமைத்துவ ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

8. அதிகாரசபையானது, அமைவிடங்களில் பயன்படுத்தப்பட்ட கடலடி வாழிடத்தின் அல்லது பொருட்களின் ஏதேனும் படியிறக்கத்தைக் கண்காணித்தல் வேண்டுமென்பதுடன் அதுதொடர்பிலான தணிப்புமுறை வழிமுறைகளை எடுத்தலும் வேண்டும்.

9. நீரின் தரத்தைப் பழுதடையச்செய்து, சூழலுக்கும் அல்லது மனித சுகாதாரத்துக்கும் தீங்கு விளைவிக்கின்ற ஏதேனும் தீழ்ப்பாக்கியை ஆளொருவர் சூழலுக்குள் வெளியேற்றுதலாகாது.

10. அதிகாரசபையானது, அங்கீகரிக்கப்பட்ட இரசாயனப் பொருட்கள் பற்றிய இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்.

11. அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்படாத ஏதேனும் இரசாயனப்பொருளை ஆளொருவர் சூழலுக்குள் வெளியேற்றுதலாகாது.

12. எவரேனுமாள், அதிகாரசபையினால் வழங்கப்பட்ட நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் முகாமைத்துவ உரிமத்தைப் பெறுவதன்மேல், அத்தகைய உரிமம் வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஆறுமாதங்களினுள் நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் கருத்திட்டத்துக்கு இயைபான இடப்பரப்பை அபிவிருத்தி செய்தல் வேண்டுமென்பதுடன் வர்த்தக அளவில் உற்பத்தியைத் தொடங்குதலும் வேண்டும்.

13. ஏதேனும் கடலுயிரி வளர்ப்புப் பண்ணையில் காணப்படும் எவையேனும் இறந்த மீன்கள் அல்லது பண்படுத்தப்பட்ட உயிரி, கிரமமானமுறையில், அங்கீகரிக்கப்பட்ட அமைவிடங்களுக்கு அப்புறப்படுத்தப்படுதல் வேண்டும்.

14. கடலுயிரி வளர்ப்பின் உற்பத்தி இடப்பரப்புகளில் கணக்காய்வு செய்யும், மாதிரிகளை எடுக்கும் மற்றும் பகுப்பாய்வு செய்யும் நோக்கத்துக்காக, அத்தகைய கடலுயிரி வளர்ப்பின் உற்பத்தி இடப்பரப்புகளின் மீது கட்டுப்பாட்டைப் பிரயோகிப்பதற்கு அதிகாரசபை தத்துவமுடையதாதல் வேண்டும்.

15. கடல்சார் மீன் பண்ணையொன்றின் எவரேனும் சொந்தக்காரர், ஒரு நோய் பரவுகின்றமையை அவதானிக்கும்போது அல்லது சந்தேகிக்கும் போது, அத்தகைய நிலைமையை அதிகாரசபைக்குத் தெரிவித்தல் வேண்டுமென்பதுடன் அதிகாரசபையானது அந்நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு அவசியமான தனிமைப்படுத்தல் வழிமுறைகளை எடுத்தலும் வேண்டும்.

16. ஒவ்வொரு கடலுயிரி வளர்ப்புப் பண்ணையும், பண்ணையில் வளர்க்கப்பட்ட இனங்கள், பாவனையிலுள்ள பண்ணை அமைவிடங்கள், கையிருப்பின் தொகை, எய்தப்பட்ட உற்பத்தி, விற்பனை வழி (அதாவது உள்நாட்டில் விற்பனை செய்யப்பட்டதா அல்லது ஏற்றுமதி செய்யப்பட்டதா), எதிர்நோக்கப்பட்ட நோய்கள் அல்லது இறப்பு நிலைகள், பயன்படுத்தப்பட்ட தீனி (வணிகப்பெயர்) மற்றும் பணியாட்டொகுதியினரின் எண்ணிக்கை என்பவற்றை விவரிக்கின்ற காலாண்டுக்கான (3 மாதங்கள்) நிலைமை அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

17. ஏதேனும் கடலுயிரி வளர்ப்புப் பண்ணையானது, தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபையினால் (தேநீபொபஅஅ) அல்லது அந்நோக்கத்துக்காகத் தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபையினால் அல்லது விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தினால் விதந்துரைக்கப்பட்ட வேறேதேனும் அதிகாரசபையினால் சான்றுப்படுத்தப்பட்ட நோய் பரிசோதனை செய்யப்பட்ட இளமையானவற்றை அல்லது சிறியனவானவற்றை மட்டுமே பயன்படுத்துதல் வேண்டும்.

18. ஒவ்வொரு கடலுயிரி வளர்ப்புப் பண்ணையும், அதிகாரசபையினால் தயாரிக்கப்பட்ட மிகச்சிறந்த முகாமைத்துவச் செயல்முறைகளை (மிமுசெ) பின்பற்றுதல் வேண்டும்.

19. ஒவ்வொரு கடலுயிரி வளர்ப்புப் பண்ணையும், அந்த இடப்பரப்பின் ஏதேனும் நீரியல் பொருட்களைப் பண்படுத்தற் கழகத்தின்கீழ் அல்லது அந்த இடப்பரப்பின் முதலீட்டாளர்கள் கழகத்தின்கீழ் பதிவுசெய்யப்படுதல் வேண்டும்.

20. இவ்வொழுங்குவிதிகளில் -

"அதிகாரசபை" என்பது, 1998 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கைத் தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட தேசிய நீரியல் பொருட்களைப் பண்படுத்தல் அபிவிருத்தி அதிகாரசபை என்று பொருளாகும்;

"மத்தி சூழல் அதிகாரசபை" என்பது, 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட மத்திய சூழல் அதிகார சபை என்று பொருளாகும் ;

"கடலுயிரி வளர்ப்பு" என்பது, கடற்பரப்பிலுள்ள எவையேனும் இனங்களை எவையேனும் பண்படுத்தல் முறைகளில் பண்படுத்தல் என்று பொருளாகும் ;

"கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை" என்பது, 2008 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, கடல்சார் தீழ்ப்புத் தடைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை என்று பொருளாகும்.

EOG 02-0044

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.